# TNPSC குரூப் 1 2026 – பதவிகள், காலியிடங்கள், தேர்வுத் தேதிகள், தகுதி, தேர்வு முறை, பாடத்திட்டம்

புதுப்பிக்கப்பட்டது: 05-11-2026 · https://www.shanmugamiasacademy.in/tnpsc-group-1

**TNPSC குரூப் 1 (Combined Civil Services Examination–I, Group I Services) 2026** – அறிவிக்கை எண் 05/2026 (விளம்பர எண் 736, நாள் 23-06-2026). துணை ஆட்சியர் (Deputy Collector) போன்ற தமிழ்நாடு அரசின் உயர் பதவிகளுக்கான தேர்வு இது. முதல்நிலைத் தேர்வு (Prelims), முதன்மைத் தேர்வு (Mains), நேர்முகத் தேர்வு (Interview) என மூன்று நிலைகள்.

**இப்போதைய நிலை (03-11-2026):** விண்ணப்பக் காலம் முடிந்துவிட்டது. முதல்நிலைத் தேர்வு **27-09-2026** அன்று 46 பணியிடங்களுக்கு நடந்து முடிந்தது; தற்காலிக விடைக்குறிப்பு (Tentative Answer Key) 06-10-2026 அன்று வெளியானது. **முதல்நிலைத் தேர்வு முடிவு இன்னும் வெளியாகவில்லை** – TNPSC தேர்வு முடிவு அட்டவணையில் (23-10-2026 நிலவரம்) உத்தேசமாக **டிசம்பர் 2026** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. முதன்மைத் தேர்வுத் தேதி முதல்நிலை முடிவுடன் அறிவிக்கப்படும். முதல்நிலைத் தேர்வு எழுதியவர்கள் முடிவுக்குக் காத்திருக்காமல் இப்போதே முதன்மைத் தேர்வுக்கு (விடை எழுதும் பயிற்சி) தயாராகத் தொடங்குவது நல்லது.

இந்தப் பக்கம் TNPSC அதிகாரப்பூர்வ அறிவிக்கை, பிற்சேர்க்கை அறிவிப்புகள் (Addendum 5A, 5B), பாடத்திட்டம், தேர்வு முடிவு அட்டவணை (Selection Schedule) ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது; புதிய அறிவிப்பு வரும்போதெல்லாம் புதுப்பிக்கப்படும். ஐயம் ஏற்பட்டால் அறிவிக்கையின் ஆங்கிலப் பதிப்பே இறுதியானது. இறுதி முடிவுகளுக்கு tnpsc.gov.in பார்க்கவும்.

SHANMUGAM IAS ACADEMY
www.shanmugamiasacademy.in

## முக்கியத் தேதிகள் (Important Dates)

| நிகழ்வு | தேதி |
|---|---|
| அறிவிக்கை (05/2026, விளம்பர எண் 736) | 23-06-2026 |
| இணையவழி விண்ணப்பம் தொடக்கம் | 30-06-2026 |
| விண்ணப்பக் கடைசி நாள் | 29-07-2026 (இரவு 11.59) |
| திருத்தச் சாளரம் (Application Correction Window) | 02-08-2026 (நள்ளிரவு 12.01) – 04-08-2026 (இரவு 11.59) |
| முதல்நிலைத் தேர்வு | முதலில் 06-09-2026 என அறிவிக்கப்பட்டது; பிற்சேர்க்கை அறிவிப்பு 5A/2026 (16-07-2026) மூலம் மாற்றப்பட்டு **27-09-2026, காலை 9.30 – 12.30** நடந்து முடிந்தது |
| பிற்சேர்க்கை அறிவிப்பு 5B/2026 – கூடுதல் 20 இடங்கள் (மொத்தம் 46) | 13-08-2026 |
| தற்காலிக விடைக்குறிப்பு (Tentative Answer Key) | 06-10-2026 அன்று வெளியானது |
| முதல்நிலைத் தேர்வு முடிவு | **இன்னும் வெளியாகவில்லை** (03-11-2026 நிலவரம்); TNPSC தேர்வு முடிவு அட்டவணையில் உத்தேசமாக டிசம்பர் 2026 |
| முதன்மைத் தேர்வு (Mains) | **தேதி இன்னும் அறிவிக்கப்படவில்லை** – முதல்நிலை முடிவுடன் அறிவிக்கப்படும் |
| நேர்முகத் தேர்வு (Interview) | முதன்மைத் தேர்வு முடிவுக்குப் பின் அறிவிக்கப்படும் |

## பதவிகள், காலிப்பணியிடங்கள் (Posts and Vacancies)

அறிவிக்கை 05/2026-இல் 26 இடங்கள் அறிவிக்கப்பட்டன. பிற்சேர்க்கை அறிவிப்பு 5B/2026 (13-08-2026) மூலம் TNPSC மேலும் 20 இடங்களைச் சேர்த்தது; இப்போது மொத்தம் **46 பணியிடங்கள்**. அனைத்துப் பதவிகளும் ஊதிய நிலை (Level of Pay) 22.

| பதவி | பணி (Service) | பதவிக் குறியீடு | அறிவிக்கையில் (05/2026) | திருத்தப்பட்டது (5B/2026) |
|---|---|---|---|---|
| துணை ஆட்சியர் (Deputy Collector) | Tamil Nadu Civil Service | 1001 | 12 (பின்னடைவுக் காலியிடம் உட்பட) | 12 |
| வணிகவரி உதவி ஆணையர் (Assistant Commissioner, Commercial Taxes) | Tamil Nadu Commercial Taxes Service | 1003 | 2 | **10** |
| கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் (Deputy Registrar of Co-operative Societies) | Tamil Nadu Co-operative Service | 1004 | 3 (பற்றாக்குறை இடங்கள் உட்பட) | **6** (பற்றாக்குறை இடங்கள் உட்பட) |
| மாவட்டப் பதிவாளர் (District Registrar) | Tamil Nadu Registration Service | 1005 | 8 | 8 |
| தொழிலாளர் உதவி ஆணையர் (Assistant Commissioner of Labour) | Tamil Nadu Labour Service | 1946 | 1 | 1 |
| ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (Assistant Director of Rural Development) – புதிதாகச் சேர்க்கப்பட்டது | Tamil Nadu Panchayat Development Service | 1006 | – | **6** |
| மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (District Employment Officer) – புதிதாகச் சேர்க்கப்பட்டது | Tamil Nadu General Service | 1007 | – | **3** |
| **மொத்தம்** | | | **26** | **46** |

அறிவிக்கையின் பத்தி 3.1-இன்படி காலியிட எண்ணிக்கை தற்காலிகமானது; முதல்நிலைத் தேர்வு முடிவு வெளியாகும் வரை மாறலாம். மாறினால், அடுத்த நிலைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோர் எண்ணிக்கையும் அதற்கேற்ப மாறும். இறுதி எண்ணிக்கையை TNPSC இணையதளத்தில் பார்க்கவும்.

## தகுதி (Eligibility)

### கல்வித் தகுதி

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / கல்வி நிறுவனத்தில் **ஏதேனும் ஒரு பட்டம் (Degree)** – அனைத்துப் பதவிகளுக்கும்.
- பிற தகுதிகள் சமமாக இருக்கும்போது சில பதவிகளுக்கு முன்னுரிமை உண்டு: வணிகவரி உதவி ஆணையர் – B.Com., B.L. பட்டங்கள், வரிச் சட்டப் பட்டயம் (Diploma in Taxation Laws) பெற்றவர்களுக்கு (அறிவிக்கையில் உள்ள வரிசைப்படி); தொழிலாளர் உதவி ஆணையர் – விடுதலைப் போராட்ட வீரர்கள், அவர்களின் குடும்பத்தினருக்கு; ஊரக வளர்ச்சி உதவி

இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் – பிற்சேர்க்கை அறிவிப்பு 5B-இல் குறிப்பிட்ட பட்டங்கள் பெற்றவர்களுக்கு.
- அறிவிக்கை நாளில் **தமிழில் போதிய அறிவு** இருக்க வேண்டும் (SSLC / HSC / பட்டத்தில் தமிழ் ஒரு மொழிப்பாடம், அல்லது தமிழ்வழியில் படிப்பு, அல்லது TNPSC நடத்தும் தமிழ் Second Class Language Test (Full Test) தேர்ச்சி).

### வயது வரம்பு (01-07-2026 அன்று)

- **குறைந்தபட்ச வயது:** 21 (அனைத்துப் பதவிகளுக்கும்).
- **பிற வகுப்பினர் (Others):** 34 வயது நிறைவடைந்திருக்கக் கூடாது. வணிகவரி உதவி ஆணையர் பதவிக்கு B.L. பட்டம் பெற்றவர்கள் – 35.
- **SC, SC(A), ST, MBC/DC, BC(OBCM), BCM:** 39 வயது நிறைவடைந்திருக்கக் கூடாது. வணிகவரி உதவி ஆணையர் பதவிக்கு B.L. பட்டம் பெற்றவர்கள் – 40.
- மாற்றுத்திறனாளிகள், முன்னாள் படைவீரர்கள், ஆதரவற்ற விதவையருக்குக் கூடுதல் வயதுச் சலுகை உண்டு.
- பிற வகுப்பினரில் அரசுப் பணியில் 5 ஆண்டு அல்லது அதற்கு மேல் பணியாற்றியவர்கள் வயது வரம்புக்குள் இருந்தாலும் விண்ணப்பிக்க இயலாது.
- ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் பதவிகளுக்கும் இதே வரம்பு (பிற வகுப்பினர் 34; பிற பிரிவினர் 39).
- உங்கள் பதவிக்கான சரியான வரம்பை அறிவிக்கையின் பத்தி 4.1 அட்டவணையிலும் பிற்சேர்க்கை அறிவிப்பு 5B பத்தி 3-இலும் பார்க்கவும்.

> **குறிப்பு (05-11-2026):** அரசாணை (நிலை) எண் 68, மனிதவள மேலாண்மை (எஸ்) துறை, நாள் 30-10-2026 மூலம் அனைத்துப் பிரிவினருக்கும் வயது உச்ச வரம்பு 5 ஆண்டுகள் உயர்த்தப்பட்டுள்ளது (முதலில் குரூப் 4 அறிவிக்கை 11/2026-க்குப் பொருந்தியது). குரூப் 1 2026 அறிவிக்கை (05/2026) விண்ணப்பம் ஏற்கனவே முடிந்துவிட்டதால் மேலே உள்ள வயது வரம்பு அந்த அறிவிக்கையில் உள்ளபடியே. அடுத்த அறிவிக்கைகளில் வயது அட்டவணையைச் சரிபார்க்கவும்.

## தேர்வு முறை (Exam Pattern)

### 1. முதல்நிலைத் தேர்வு (Preliminary) – தகுதித் தேர்வு மட்டும்

| பாடம் | தரம் | வினாக்கள் | மதிப்பெண் | நேரம் |
|---|---|---|---|---|
| பொது அறிவு (General Studies) | பட்டப்படிப்பு | 175 | 300 (மொத்தம்) | 3 மணி நேரம் |
| திறனறிவு & மனத்திறன் (Aptitude and Mental Ability) | SSLC | 25 | | |
| **மொத்தம்** | | **200** | **300** | |

- ஒரே தாள், கொள்குறி வகை (Objective), OMR முறை; வினாக்கள் தமிழ், ஆங்கிலம் இரண்டிலும்.
- குறைந்தபட்சத் தகுதி மதிப்பெண்: SC, SC(A), ST, MBC/DC, BC(OBCM), BCM – **90**; பிற வகுப்பினர் – **120**.

- **முதல்நிலை மதிப்பெண் இறுதித் தரவரிசைக்குக் கணக்கிடப்படாது.** இடஒதுக்கீட்டு விதிப்படி, காலியிட எண்ணிக்கையின் 20 மடங்கு பேர் (ஒவ்வொரு பிரிவிலும் cut-off மதிப்பெண்ணுக்குச் சமமாகப் பெற்ற அனைவரும் உட்பட) முதன்மைத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர்.

## 2. முதன்மைத் தேர்வு (Main) – விரிவான விடை எழுதும் தேர்வு

| தாள் | பாடம் | தரம் | மதிப்பெண் | நேரம் |
|---|---|---|---|---|
| தாள் I | தமிழ்த் தகுதித் தேர்வு (Tamil Eligibility Test) – தகுதிக்கு மட்டும் | SSLC | 100 (குறைந்தது 40 தேவை) | 3 மணி நேரம் |
| தாள் II | பொது அறிவு I (General Studies I) | பட்டப்படிப்பு | 250 | 3 மணி நேரம் |
| தாள் III | பொது அறிவு II (General Studies II) | பட்டப்படிப்பு | 250 | 3 மணி நேரம் |
| தாள் IV | பொது அறிவு III (General Studies III) | பட்டப்படிப்பு | 250 | 3 மணி நேரம் |
| நேர்முகத் தேர்வு | Interview | – | 100 | – |
| **தரவரிசைக்கான மொத்தம்** | தாள் II + III + IV + நேர்முகம் | | **850** | |

- தாள் I-இல் குறைந்தது 40 மதிப்பெண் பெற்றால் மட்டுமே தாள் II, III, IV திருத்தப்படும். தாள் I மதிப்பெண் தரவரிசைக்குக் கணக்கிடப்படாது.
- முதன்மைத் தேர்வுக் குறைந்தபட்சத் தகுதி மதிப்பெண் (தாள் II + III + IV, 750-க்கு): SC, SC(A), ST, MBC/DC, BC(OBCM), BCM – **225**; பிற வகுப்பினர் – **300**. இதைவிடக் குறைவாகப் பெற்றவர்கள் நேர்முகத் தேர்வுக்குத் தகுதி பெறமாட்டார்கள். நேர்முகத் தேர்வுக்குக் குறைந்தபட்ச மதிப்பெண் இல்லை.
- மாற்றுத்திறனாளித் தேர்வர்கள் தாள் I-இலிருந்து விலக்கு பெறலாம் (விண்ணப்பத்திலேயே குறிப்பிட வேண்டும்).
- முதன்மைத் தேர்வின் அனைத்துத் தாள்களையும் நேர்முகத் தேர்வையும் கட்டாயம் எழுத / பங்கேற்க வேண்டும்.
- முதன்மைத் தேர்வு மையம்: **சென்னை மட்டும்**.
- நேர்முகத் தேர்வுக்கு: ஒரு இடஒதுக்கீட்டுப் பிரிவில் 5 அல்லது அதற்கு மேல் காலியிடம் இருந்தால் 2 மடங்கு; 4 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் 3 மடங்கு பேர் அழைக்கப்படுவர்.

## பாடத்திட்டம் – சுருக்கம் (Syllabus Overview)

முழுப் பாடத்திட்டம் (அதிகாரப்பூர்வ PDF): முதல்நிலைப் பாடத்திட்டம் · முதன்மைத் தேர்வுப் பாடத்திட்டம்.

## முதல்நிலை – அலகு வாரியான வினா எண்ணிக்கை

| அலகு | பகுதி A – பொது அறிவு (பட்டப்படிப்புத் தரம்) | வினாக்கள் |
|---|---|---|
| I | பொது அறிவியல் | 10 |
| II | இந்தியப் புவியியல் | 10 |
| III | இந்தியாவின் வரலாறு, பண்பாடு மற்றும் இந்திய தேசிய இயக்கம் | 25 |
| IV | இந்திய ஆட்சியியல் | 40 |
| V | இந்தியப் பொருளாதாரம் மற்றும் தமிழ்நாட்டில் வளர்ச்சி நிர்வாகம் | 50 |
| VI | தமிழ்நாட்டின் வரலாறு, பண்பாடு, மரபு மற்றும் சமூக – அரசியல் இயக்கங்கள் | 40 |
| – | பகுதி B – திறனறிவு (15) + காரணவியல் (10), SSLC தரம் | 25 |

கவனிக்க: ஆட்சியியல் (40), பொருளாதாரம் + தமிழ்நாடு நிர்வாகம் (50), தமிழ்நாடு வரலாறு (40) – இந்த மூன்று அலகுகளுக்கே 175-இல் 130 வினாக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அலகு வாரியான எண்ணிக்கை தோராயமானது; TNPSC தேவைப்பட்டால் சிறிது கூட்டவோ குறைக்கவோ செய்யலாம் (அறிவிக்கை பத்தி 6.7).

## முதன்மைத் தேர்வு – தாள் வாரியான அலகுகள்

| தாள் | அலகுகள் (மதிப்பெண்) |
|---|---|
| தாள் I – தமிழ்த் தகுதித் தேர்வு | மொழிபெயர்ப்பு (தமிழ் ↔ ஆங்கிலம்), சுருக்கி வரைதல், விரிவாக்கம், அலுவலகக் கடிதம், பத்தியைப் படித்துப் புரிதல், சொல் / தொடர் பயிற்சி, திருக்குறள் சார்ந்த கட்டுரை, நடப்பு / சமூக / வளர்ச்சித் தலைப்புகள் |
| தாள் II – பொது அறிவு I | நவீன இந்திய வரலாறு மற்றும் இந்தியப் பண்பாடு (100); இந்தியா, தமிழ்நாட்டின் சமூகப் பிரச்சினைகள் (100); அறநெறியும் நேர்மையும் – Ethics and Integrity (50) |
| தாள் III – பொது அறிவு II | இந்திய ஆட்சியியல் மற்றும் இந்தியாவைப் பாதிக்கும் உலக அரசியல் போக்குகள் (100); இந்திய வளர்ச்சியில் அறிவியல், தொழில்நுட்பத்தின் பங்கு (100); தமிழ்ச் சமூகம் – பண்பாடு, மரபு (50) |
| தாள் IV – பொது அறிவு III | பொதுப் புவியியல், தமிழ்நாட்டை மையப்படுத்திய இந்தியப் புவியியல் (75); சுற்றுச்சூழல், பல்லுயிர், பேரிடர் மேலாண்மை (75); இந்தியப் பொருளாதாரம் – நடப்புப் போக்குகள், உலகப் பொருளாதாரத்தின் தாக்கம் (100) |

## கட்டணம் (Fee)

- ஒருமுறைப் பதிவு (OTR): ₹150 (பதிவு செய்த நாளிலிருந்து 5 ஆண்டுகள் செல்லும்).
- முதல்நிலைத் தேர்வுக் கட்டணம்: **₹100**.

- முதன்மைத் தேர்வுக் கட்டணம்: **₹200** – முதல்நிலையில் தேர்ச்சி பெற்று அழைக்கப்படுபவர்கள் மட்டும் செலுத்த வேண்டும்.
- இணையவழியில் மட்டும் செலுத்த வேண்டும்; சேவைக் கட்டணம் தனி.
- கட்டண விலக்கு: SC, SC(A), ST, மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்ற விதவையர் – முழு விலக்கு; BC(OBCM), BCM, MBC/DC – மூன்று இலவச வாய்ப்புகள்; முன்னாள் படைவீரர்கள் – இரண்டு இலவச வாய்ப்புகள்.

## விண்ணப்பிக்கும் முறை (How to Apply)

2026 குரூப் 1 விண்ணப்பக் காலம் முடிந்துவிட்டது. அடுத்த அறிவிக்கைக்கு இதே முறை:

1. **tnpscexams.in** இணையதளத்தில் மட்டுமே இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
2. முதலில் ஒருமுறைப் பதிவு (OTR) – ஆதார் இணைப்பு, செயலில் உள்ள மின்னஞ்சல், கைபேசி எண் தேவை.
3. OTR பயனர் பெயர் / கடவுச்சொல்லுடன் உள்நுழைந்து குரூப் 1 தேர்வுக்கு "APPLY" செய்து, புகைப்படம், கையொப்பம் பதிவேற்றி, முதல்நிலைத் தேர்வுக்கு இரண்டு மையங்களை விருப்பமாகத் தேர்வு செய்யவும் (மாற்றுத்திறனாளிகள் ஒரு மையம் மட்டும்).
4. கட்டணம் செலுத்தி "SUBMIT" செய்த பின் வரும் Application Number-ஐக் குறித்து வைத்துக் கொள்ளவும். திருத்தம் தேவையெனில் அறிவிக்கையில் கூறிய திருத்தச் சாளரத்தில் மட்டும்.

உதவி: TNPSC கட்டணமில்லா எண் 1800 419 0958 (வேலை நாட்களில் காலை 10.00 – மாலை 5.45); OTR / விண்ணப்பம் தொடர்பாக helpdesk@tnpscexams.in.

## அடுத்த குரூப் 1 அறிவிக்கை எப்போது?

TNPSC ஒவ்வோர் ஆண்டும் தேர்வுத் திட்ட அட்டவணையை (Annual Planner) வெளியிடுகிறது. 2026 அட்டவணையில் குரூப் 1 அறிவிக்கை 23-06-2026 எனக் குறிக்கப்பட்டிருந்தது. 2027 அட்டவணை இந்தப் பக்கம் புதுப்பிக்கப்பட்ட நாளில் (03-11-2026) TNPSC இணையதளத்தில் இல்லை; வெளியானதும் இங்கே சேர்க்கப்படும். தேதிகளுக்கு எங்கள் தேர்வு அட்டவணைப் பக்கத்தையும் பார்க்கலாம்.

## உங்கள் தயாரிப்புக்கு எங்கள் உதவி

- TNPSC முதன்மைத் தேர்வு – தினசரி விடை எழுதும் பயிற்சி (மாதிரி விடையுடன்)
- TNPSC இலவச வினாடி வினா – பாடம் வாரியாக: ஆட்சியியல், பொருளாதாரம், தமிழக வரலாறு, தமிழகப் பொருளாதாரம் / நிர்வாகம், திறனறிவு
- இன்றைய நடப்பு நிகழ்வுகள் (தமிழில்)
- TNPSC குறிப்புகள் – தமிழகத் தலைவர்கள்
- TNPSC புத்தகங்கள், PYQ புத்தகங்கள்
- TNPSC தேர்வு அட்டவணை (Exam Calendar)
- TNPSC பயிற்சி வகுப்புகள் · கட்டண விவரம்
- வகுப்பறைப் பயிற்சி: குரூப் 1 பயிற்சி – கோவை · குரூப் 1 பயிற்சி – மதுரை · TNPSC பயிற்சி – கோவை · மதுரைக் கிளை
- பேச: +91 99941 46662 · WhatsApp

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

### TNPSC குரூப் 1 தேர்வு என்றால் என்ன? எந்தப் பதவிகள்?

TNPSC நடத்தும் Combined Civil Services Examination–I (Group I Services) தமிழ்நாடு அரசின் உயர் பதவிகளுக்கான தேர்வு. 2026 அறிவிக்கை (05/2026), பிற்சேர்க்கை அறிவிப்பு 5B/2026 ஆகியவற்றின்படி துணை ஆட்சியர், வணிகவரி உதவி ஆணையர், கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர், மாவட்டப் பதிவாளர், தொழிலாளர் உதவி ஆணையர், ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ஆகிய பதவிகள் உள்ளன.

### 2026 குரூப் 1 தேர்வில் எத்தனை காலியிடங்கள்?

அறிவிக்கையில் (05/2026) 26 இடங்கள் அறிவிக்கப்பட்டன. பிற்சேர்க்கை அறிவிப்பு 5B/2026 (13-08-2026) மூலம் TNPSC மேலும் 20 இடங்களைச் சேர்த்தது; மொத்தம் 46. அறிவிக்கையின்படி எண்ணிக்கை தற்காலிகமானது; முதல்நிலைத் தேர்வு முடிவு வெளியாகும் வரை மாறலாம்.

### குரூப் 1 முதன்மைத் தேர்வு (Mains) எப்போது?

முதல்நிலைத் தேர்வு 27-09-2026 அன்று நடந்தது. அதன் முடிவு இன்னும் (03-11-2026) வெளியாகவில்லை; TNPSC தேர்வு முடிவு அட்டவணையில் உத்தேசமாக டிசம்பர் 2026 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. முதன்மைத் தேர்வுத் தேதியை முதல்நிலை முடிவு வெளியாகும்போது TNPSC அறிவிக்கும்; தேர்வு சென்னையில் மட்டும் நடைபெறும்.

### குரூப் 1-க்கு யார் விண்ணப்பிக்கலாம்?

ஏதேனும் ஒரு பட்டம் பெற்றவர்கள்; அறிவிக்கை நாளில் தமிழில் போதிய அறிவு தேவை. 01-07-2026 அன்று குறைந்தது 21 வயது. அதிகபட்சம்: பிற வகுப்பினர் 34, SC, SC(A), ST, MBC/DC, BC(OBCM), BCM பிரிவினர் 39 (வணிகவரி உதவி ஆணையர் பதவிக்கு B.L. பெற்றவர்களுக்கு 35 / 40). மாற்றுத்திறனாளிகள், முன்னாள் படைவீரர்கள், ஆதரவற்ற விதவையருக்குக் கூடுதல் சலுகை உண்டு. இவை 05/2026 அறிவிக்கையின் வரம்புகள்; அரசாணை (நிலை) எண் 68 (30-10-2026) மூலம் அனைத்துப் பிரிவினருக்கும் வயது உச்ச வரம்பு 5 ஆண்டுகள் உயர்த்தப்பட்டுள்ளது – அடுத்த அறிவிக்கையின் வயது அட்டவணையைப் பார்க்கவும்.

### முதல்நிலைத் தேர்வு மதிப்பெண் இறுதித் தரவரிசைக்குக் கணக்கிடப்படுமா?

இல்லை. முதல்நிலைத் தேர்வு (200 வினாக்கள், 300 மதிப்பெண்) தகுதித் தேர்வு மட்டுமே. இறுதித் தரவரிசை முதன்மைத் தேர்வின் தாள் II, III, IV (750) மற்றும் நேர்முகத் தேர்வு (100) – மொத்தம் 850 மதிப்பெண் அடிப்படையில்.

### முதன்மைத் தேர்வில் தமிழ்த் தாள் கட்டாயமா?

ஆம். தாள் I தமிழ்த் தகுதித் தேர்வு (SSLC தரம், 100 மதிப்பெண்). குறைந்தது 40 மதிப்பெண் பெற்றால் மட்டுமே பொது அறிவுத் தாள்கள் திருத்தப்படும். இதன் மதிப்பெண் தரவரிசைக்குச் சேராது. மாற்றுத்திறனாளித் தேர்வர்கள் இந்தத் தாளிலிருந்து விலக்கு பெறலாம்.

### குரூப் 1 முதல்நிலைத் தேர்வில் எந்த அலகுகளுக்கு அதிக முக்கியத்துவம்?

பொது அறிவு 175 வினாக்களில் இந்தியப் பொருளாதாரம் மற்றும் தமிழ்நாட்டில் வளர்ச்சி நிர்வாகம் 50, இந்திய ஆட்சியியல் 40, தமிழ்நாட்டின் வரலாறு, பண்பாடு, மரபு, சமூக – அரசியல் இயக்கங்கள் 40 வினாக்கள். மேலும் திறனறிவு, காரணவியல் 25 வினாக்கள். இந்த எண்ணிக்கை தோராயமானது.

## அடுத்த குரூப் 1 அறிவிக்கை எப்போது வரும்?

TNPSC-இன் 2027 தேர்வுத் திட்ட அட்டவணை (Annual Planner) வெளியானதும் தெரியும். 03-11-2026 வரை அது வெளியாகவில்லை. வெளியானதும் இந்தப் பக்கத்தில் புதுப்பிப்போம்.


### Shanmugam IAS Academy – அடுத்த படி

- **வகுப்புகள்:** TNPSC குரூப் 1, 2 / 2A (Prelims + Mains), குரூப் 4, UPSC / IAS, வங்கி, SSC, SI – கோவை · மதுரை · ஆன்லைன் – https://www.shanmugamiasacademy.in/fees
- **நூல்கள் (PDF):** TNPSC PYQ நூல்கள், பொதுத் தமிழ் முழுமையான நூல், UPSC நூல்கள் – https://www.shanmugamiasacademy.in/study-materials
- **மேலும் இலவச PDF:** https://www.shanmugamiasacademy.in/free-pdf-download · இந்தப் பக்கம்: https://www.shanmugamiasacademy.in/tnpsc-group-1

**சேர்க்கைக்கு அழைக்க / WhatsApp: 99941 46662 · 99944 27714 · www.shanmugamiasacademy.in**